# இந்திய பிரதமருக்கு அனுப்பப்படும் கையெழுத்து இயக்கத்தின் வேண்டுகோள்

பெறுனர்
இந்திய பிரதமர்,
புது டெல்லி.

ஐயா,

பொதுவாக அரசின் கஜானாவிற்கும், அரசு ஊழியர்களின் சேவை நிலையிலும் ஒரு மோசமான தாக்கத்தை உருவாக்கும் வகையில் தற்போது மீண்டும் பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஓய்வூதிய நிதி ஒழுங்கு முறை மற்றும் மேம்பாட்டு ஆணைய திருத்த மசோதாவில் உள்ள ஒரு சில அம்சங்களை உங்களது பரிவான பார்வைக்கும், தங்கள் அலுவலகம் மூலமாக இந்திய நாட்டு பாராளுமன்ற உறுப்பினர்களின் கவனத்திற்கும் கொண்டு வருவதற்காக நாங்கள் இந்த மனுவை சமர்ப்பிக்கின்றோம். எங்களது கோரிக்கைகளை கவனத்துடன் பரிசீலித்து, இந்த மசோதாவில் உள்ள அம்சங்கள் ஏற்படுத்தும் தாக்கங்களை கணக்கிட்டு, இந்த மசோதாவை பாராளுமன்றத்திலிருந்து திரும்ப பெறும் முடிவை எடுக்க வேண்டும் என நாங்கள் கேட்டுக் கொள்கிறோம்.

இந்த மசோதாவை விமர்சனபூர்வமாகவும், யதார்த்தபூர்வமாகவும் பரிசீலிப்பதற்காக கீழ்கண்ட விஷயங்களை உங்கள் பார்வைக்கு முன் வைக்கிறோம்.

01. அரசர்களுக்கு 40 ஆண்டு காலம் சிறந்த சேவை செய்த வயதான அரசு ஊழியர்களுக்கு பாதி சம்பளத்தை ஓய்வூதியமாக தரும் முறை என்பது கிறிஸ்து பிறப்பதற்கு முன்னூறு ஆண்டுகளுக்கு முன்பிருந்தே இருந்து வரும் பழக்கமாகும்.

02. கடந்த நூற்றாண்டில், காலனி ஆட்சியாளர்கள் திறமையான ஊழியர்களை அரசாங்க வேலைகளுக்கு கவர்வதற்காக 1920ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப் பட்டது தான் அரசு ஊழியர்களுக்கான ஓய்வூதிய திட்டம். தனது பல்வேறு பரிந்துரைகள் மூலமாக இதனை மேம்படுத்திய 1935ஆம் ஆண்டில் வெளியான இந்திய அரசாங்க சட்டம் இதற்கு சட்ட பூர்வ அந்தஸ்தை வழங்கியது.

03. ஓய்வூதியம் என்பது ஒரு ஊழியரின் கடந்த கால சேவைக்கான பரிசே ஒழிய, முதலாளிகளின் கருணையின் காரணமாக தரப்படுவது அல்ல என DS சாக்சேனாவிற்கும் அரசிற்கும் இடையேயான (AIR1983-SC-130) வழக்கில், ஓய்வூதியத்தின் தன்மையினை உச்ச நீதி மன்றம் விளக்கி உள்ளது.(இது மத்திய மாநில அரசு ஊழியர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் மற்றும் ஓய்வூதிய திட்டத்தில் உள்ள அனைவருக்கும் பொருந்தும்).

04. மத்திய அரசால் 1983ல் நியமிக்கப்பட்ட 5ஆவது ஊதியக் குழு, மத்திய அரசு ஊழியர்களின் ஊதியம் மற்றும் ஓய்வூதியத்தை பரிசீலித்து, உச்ச நீதிமன்றத்தின் இந்த தீர்ப்பை சுட்டிக் காட்டி தனது பாரா எண் 127.6ல் 'ஓய்வூதியம் எனபது அரசு ஊழியர்களின் நெற்றி வியர்வையால் பெறப்பட்ட சட்ட பூர்வமான, மறுக்க முடியாத மற்றும் சட்டபூர்வமாக அமுலபடுத்தக் கூடிய உரிமை. எனவே அதற்கு ஏற்ற முறையில் அது நிர்ணயிக்கப்பட வேண்டும், பணியில் உள்ள ஊழியர்களின் ஊதியத்திற்கு மாறுபடாமல் மாற்றப்பட வேண்டும்'என தெரிவிக்கிறது.

05. பல ஆண்டு காலமாகவே, அரசு ஊழியர்களின் ஊதியத்தை நிர்ணையிப்பதற்காக மேற்கொண்ட வழிகாட்டும் நெறிமுறைகள் என்பது ஊதிய ஈட்டையும் கணக்கிடும் வகையிலேயே விஸ்தரிக்கப்பட்டு உள்ளது. அதன் படி பணி ஓய்விற்கு பின் ஓய்வூதியம் தரப்படுவதற்காகவே பணிக்காலத்தில் ஊதியம் குறைத்து வழங்கப் படும். எனவே, அரசாங்க சேவைக்கான ஓய்வூதியம் என்பது 'கொடுபடா ஊதியம்' என பெயர் சூட்டப்பட்டது. அணி திரட்டப்பட்ட தனியார் நிறுவனங்கள் தங்களது ஊழியர்கள் வருங்கால வைப்பு நிதியில் சேமிக்கும் தொகைக்கு இணையாக அவர்களும் தங்களது பங்களிப்பை தரும் போது அரசாங்கமோ அரசு ஊழியர்களின் வருங்கால வைப்பு நிதிக்கு பணம் தருவதில்லை. ஓய்வூதியத்திற்கென அவர்களிடம் பணமும் பெறுவதில்லை. ஒருவர் தனது வயதான காலத்தில் ஒரு குறிப்பிட்ட தொகையை பெறும் வகையில் ஊழியர்களின் இளமைக்காலத்தில் அவர்களிடம் பணைத்தை பெற்று ஓய்வூதிய நிதியை உருவாக்க வேண்டும் என சர்வதேச நிதி ஆணையம் தனது வேலை அறிக்கையின் (WP/01/125,(2001) மூலமாக சட்டபூர்வமான வரையறுக்கப்பட்ட பயன் தரும் ஓய்வூதிய முறையில் தேவையற்ற தலையீட்டை செய்துள்ளது. இது வரையறுக்கப்பட்ட பலன் தரும் ஓய்வூதிய முறையிலிருந்து வரையறுக்கப்பட்ட பங்களிப்பு முறைக்கு மாற்றக்கூடிய ஒரு நாசகர மாற்றத்திற்கான ஆலோசனையாகும். அவர்கள் அப்படி ஆலோசனை சொல்லும் சமயத்திலேயே மற்ற நாடுகள் அனுபவிப்பதை போல வயதானவர்களின் செலவால் ஏற்படும் சிரமத்தை போல இந்தியா அனுபவிக்கவில்லை என தெரிவிக்கின்றனர். மேலும் இந்தியாவில் 60 வயதுக்கு மேல் உள்ளவர்கள் மொத்த

ஜனத்தொகையில் 2004ஆம் ஆண்டில் 7% இருந்தது, 2008 ஆம் ஆண்டில் 8.6% ஆக உயர்ந்துள்ளது. அது 2030ல் 13.7%ஆகவும், 2050ல் 20%ஆக உயரும் எனவும் கணக்கிட்டுள்ளது.

07. மத்திய அரசால் அறிவிக்கப்பட்டு பெரும்பாலான மாநில அரசுகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட புதிய பங்களிப்புடன் கூடிய ஓய்வூதிய முறை, இந்த ஓய்வூதிய நிதி ஒழுங்கு முறை மற்றும் மேம்பாட்டு ஆணைய திருத்த மசோதாவின் வரையறைக்குள் வருகிறது. இந்த மசோதா யாரையும் கட்டாயப் படுத்தாமல் வயதான காலத்தில் ஒரு குறிப்பிட்ட தொகையை பெறுவதற்கு விருப்பப் படுபவருக்கான சமூக பாதுகாப்பு முறை என தெரிவிக்கப்படுகிறது. ஆனால் 01.01.2004க்கு பின் பணியில் சேர்ந்த அரசு ஊழியர்களுக்கு இது கட்டாயமாக்கப்பட்டு உள்ளது. அதன் படி அரசு ஊழியர்கள் தங்களது மொத்த ஊதியத்தில் 10% கட்டாயமாக செலுத்த வேண்டும், அரசும் முதலாளி என்ற அந்தஸ்தில் அதற்கு இணையான தொகையை தரவேண்டும். எந்த ஒரு ஊழியரும் இதில் இருந்து விலகி செல்ல முடியாது.

08. இந்த பங்களிப்புடன் கூடிய ஓய்வூதிய திட்டத்தை ஒரு தகுதி வாய்ந்த சட்டமாக கொண்டு வர முடியாத போதும், மத்திய அரசும் மேற்கு வங்கம், கேரளம் மற்றும் திரிபுராவை தவிர மற்ற மாநில அரசாங்கங்களும் முறையற்ற நிர்வாக உத்தரவுகள் மூலமாக மத்திய மாநில அரசு ஊழியர்களின் மீது தன்னிச்சையாக திணிக்க முடிவு செய்துள்ளனர். மத்திய அரசின் இந்த அறிவிப்பு, ஆயுதப் படை மற்றும் பாரா மிலிட்டரி சேவையில் உள்ள ஊழியர்களுக்கு இதில் இருந்து விலக்கு அளிக்கப்ப்ட்டுள்ள நிலையில், இடதுசாரிகள் ஆண்டுக்கொண்டிருந்த மேற்கு வங்கம், கேரளம் மற்றும் திரிபுரா அரசாங்கங்கள் அப்போது இருந்த வரையறுக்கப்பட்ட ஓய்வூதிய முறையினையே தெளிவாக தொடர்ந்தனர்.

09. சந்தையை சார்ந்த உறுதிமொழியே அல்லாது, நேரடியாகவோ தெளிவாகவோ இந்த ஒரு உறுதி மொழியையும் ஓய்வூதிய நிதி ஒழுங்கு முறை மற்றும் மேம்பாட்டு ஆணைய திருத்த மசோதா தெரிவிக்க வில்லை. எனவே சந்தாதாரர்கள் வெளியேறும் போது கீழ்கண்ட சிக்கல்களுக்கு ஆளாவார்கள்.

அ) மிகப்பெரிய சந்தை ஆபத்து ஏதாவது ஏற்பட்டது என்றால் ஓய்வூதிய நிதிக்கு பங்களித்தவர்கள் எந்த ஒரு தொகையையும் பெற இயலாத நிலை ஏற்படும்.

ஆ) எந்த ஒரு தொகையையும் குறிப்பிட முடியாததால், பொருளாதாரத்தில் ஏற்படும் பணவீக்க அழுத்தத்தின் காரணமாக வாங்கும் தொகையின் மதிப்பில் மிகப்பெரிய அளவில் வீழ்ச்சி ஏற்படும்.

இ) இந்த திட்டத்தின் அடிப்படையில் சந்தாதாரர் முதலீடு செய்யும் திட்டத்தை தேர்ந்தெடுத்துக் கொள்ளவேண்டும். அரசு ஊழியர்களுக்கு நிதி மற்றும் முதலீடு தொடர்பான விஷயங்களில் தெளிவு இல்லாத காரணத்தால், அவரது வயதான காலத்தில் பெறும் ஓய்வூதியத்தையே பறிகொடுக்கக் கூடிய தவறான முடிவை எடுக்கவும் நேரிடலாம்.

ஈ) எளிதாக கறைந்து போகக்கூடிய பங்கு சந்தையில் மிகப்பெரிய அளவில் உள்ள ஓய்வூதிய நிதியை முதலீடு செய்வதன் மூலம் எவ்வளவு அதிக லாபத்தை ஈட்டமுடியும் என்பதையே குறிக்கோளாகக் கொண்ட முதலீட்டு மேலாளர்களின் கட்டணங்களுக்கு சந்தாதாரர்கள் கட்டாயமாக பங்களிப்பை செலுத்த வேண்டியவர்களாவார்கள்.

10. அரசாங்கத்தின் கஜானாவிலிருந்து நேரடியாக செல்லக்கூடிய, ஊழியர்கள் சந்தா மற்றும் வேலை தருபவரின் பங்களிப்பால் உருவாக்கக்கூடிய இந்த ஓய்வூதிய நிதி (இது அரசின் வரி வருவாயே தவிர வேறொன்றுமில்லை) பங்கு சந்தை பரிமாற்றத்திற்கு பயன் படுத்த அனுமதிக்கப்படுகிறது. இது நியாயத்திற்கு புறம்பானது மட்டுமல்ல, இந்திய மற்றும் வெளிநாட்டு முதலாளிகளின் லாபத்திற்காக அரசு நிதியை அப்பட்டமாக கண்மூடித்தனமாக திருப்பி விடும் ஏற்பாடுதான்.

11. வரையறுக்கப்பட்ட தேதியான 01.01.2004க்கு பின்னர் பணியில் சேர்ந்த அரசு ஊழியர்களை பொறுத்த வரை தற்போது உள்ள இதை விட மேலான வரையறுக்கப்பட்ட பலன்கள் கொண்ட ஓய்வூதிய முறையிலிருந்து புதிய முறைக்கு செல்ல வைக்கும். இதன் மூலம் தனது ஊழியர்களை வரையறுக்கப்பட்ட பலன்தரும் ஓய்வூதிய முறையில் உள்ளவர்கள் மற்றும் பங்கு சந்தையின் நிலையற்ற தன்மைகளுக்கு உட்பட்ட வயதான கால சமூக பாதுகாப்பிற்காக தனது 10% ஊதியத்தை வழங்க வேண்டிய கட்டாயத்தில் உள்ள பங்களிப்பு ஓய்வூதிய திட்டத்தில் உள்ள ஊழியர்கள் என இரு கூறாக அரசு பிரித்துள்ளது. இரு தரப்பாருக்கும் ஒரே மாதிரியான ஊதியம், படிகள் மற்றும் மற்ற பலன்கள், சலுகைகள், கடமைகள் மற்றும் பொருப்புகள் ஆகியவை இருக்கும் போது, இந்த பாகுபாடு என்பது சட்டத்தால் பாதுகாக்க முடியாதது மட்டுமல்ல தற்போதுள்ள அரசியல் அமைப்பு சட்ட வழிமுறைகளுக்கு எதிரானதும் கூட.

12. தற்போது உருவாக்கப்பட்டுள்ள ஊதிய முறையானது வரையறுக்கப்பட்ட தேதிக்கு முன்னர் பணியில் இணைந்தவர்களுக்கும் அதன் பின்னர் பணியில் இணைந்தவர்களுக்கும் ஒரே அடிப்படையில் உருவாக்கப்பட்டது; அது எதிர்காலத்தில் ஓய்வூதியம் தரவேண்டிய கடமையை அரசு நிறைவேற்றும் என்ற நம்பிக்கையை இழக்க செய்து விடும். வரையறுக்கப்பட்ட தேதிக்கு

பின்னர் பணியில் இணைந்த ஊழியர்களுக்கு இந்த பங்களிப்புடன் கூடிய ஓய்வூதிய திட்டத்தை திணிப்பதன் காரணமாக அவர்களுக்கு சட்டபூர்வமான வரையறுக்கப்பட்ட ஓய்வூதிய பலன்கள் மறுக்கப்படுவதோடு மட்டுமல்லாமல் வரையறுக்கப்படாத ஒரு தொகைக்காக அவரை பங்களிக்கவேண்டும் என கட்டாயப்படுத்துவதாகும். அது மிக மோசமான பாரபட்சம் ஆகும்.

13.பங்களிப்புடன் கூடிய ஓய்வூதிய திட்டத்தின் கீழ் வருபவர்கள், முதலீட்டின் மூலம் கிடைக்கும் வளரும் நிதியை பொருத்தே தனது ஒட்டு மொத்த பங்களிப்பின் ஒரு பகுதியை பெற முடியும். இவர்களுக்கு எந்த ஒரு குறைந்த பட்ச ஓய்வூதியம் என்பதும் உறுதி செய்ய முடியாத நிலைஉள்ள போது தற்போதுள்ள திட்டத்தில் உள்ள ஊழியர்கள் வரையறுக்கப்பட்ட குறைந்தபட்ச ஓய்வூதியமும், அவர்கள் இறந்த பின்னர் அவர்களின் குடும்ப உறுப்பினர்கள்(மனைவி, கணவனை இழந்த, திருமணமாகாத மகள்களும், 25 வயதுக்கு உட்பட்ட வேலை கிடைக்காத மகன்களும்) குடும்ப ஓய்வூதியமும் பெறுவார்கள். இதனால் பாரபட்சம் என்பது பலமடங்காகிறது.

14. இந்த சட்டம் நிறைவேற்றப்பட்டால் வரையறுக்கப்பட்ட தேதிக்கு பின் பணியில் இணைந்தவர்களுக்கு ஏற்பட்டுள்ள நிலையை போலவே, தற்போதுள்ள ஊழியர்களுக்கும், வரையறுக்கப்பட்ட ஓய்வூதியம் பெறுபவர்களின் நிலையையும் மாற்றுவதற்கான அதிகாரத்தை அரசு பெற்று விடும் என்ற நியாயமான அச்சமும் ஏற்பட்டுள்ளது.

15. பங்களிப்புடன் கூடிய ஓய்வூதிய திட்டம் அறிமுகப்படுத்துவதின் முக்கிய நோக்கமே, ஓய்வூதிய கடமைக்கான செலவினத்தை வெகுவாக குறைப்பது தான் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அரசின் ஓய்வூதிய கடமைக்கான செலவினத்தின் பெரும்பகுதியே ஆயுத பாதுகாப்பு ஊழியர்களுக்கானது. ஆனால் அவர்கள் பங்களிப்புடன் கூடிய ஓய்வூதிய திட்டத்திலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளனர். பாரா மிலிட்டெரி படைகளுக்கும் புதிய திட்டத்தில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு செய்யும் போது (இது தேச பாதுகாப்பிற்காக பணியாற்றும் ஆயுத பணிக்கு மக்களை கவர்வதற்கு என்பதில் சந்தேகம் இல்லை) அரசு ஓய்வூதியத்தை அரசின் தொகுப்பு நிதியிலிருந்து செய்ய வேண்டிய கட்டாயம் உள்ளது. அரசு ஊழியர்களை புதிய ஓய்வூதிய திட்டத்திற்குள் கொண்டு வருவதற்கு அரசு முன் வைத்த வாதங்கள் 6ஆவது ஊதியக் குழுவின் ஆய்வின் படி ஏற்றுக் கொள்ள முடியாது. காப்பீட்டு சிக்கல்களையும், அதற்கு செலுத்தக்கூடிய தொகைகளையும் கணக்கீடு செய்பவரின் அறிக்கையில் (பெங்களூர், நாகர்பாவியில் உள்ள சமூக மற்றும் பொருளாதார ஆய்வகத்தின் பொருளாதார ஆய்வு மற்றும் கொள்கைக்கான மையத்தின் K.காயத்ரி அவர்கள் சமர்ப்பித்த 'மத்திய அரசு ஊழியர்களுக்கான ஓய்வு கால பலன்களி'ன் இணைப்பு) பங்களிப்புடன் கூடிய ஓய்வூதிய திட்டத்தினால் அரசின் ஓய்வூதிய செலவு என்பது அடுத்த 34 வருடங்களில் தற்போதுள்ள 14,284 கோடி ரூபாயிலிருந்து 57,088 கோடி ரூபாய்களாக அதிகரிக்கும் என்றும், 2038ஆம் வருடத்திற்கு பின்னரே அது குறைவதற்கான வாய்ப்புள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டு உள்ளது. அரசு கஜானாவிலிருந்து அடுத்த 34 வருடங்களுக்கு அதிக செலவு ஏற்படக்கூடிய கட்டாயம் ஏற்படும். வரையறுக்கப்பட்ட தேதிக்கு பின் பணியில் இணைந்தவர்களுக்கான ஓய்வூதிய நிதிக்கு தனது பங்களிப்பை அரசு செலுத்துவதோடு, பாதுகாப்பு படை ஊழியர்களுக்கும், பாரா மிலிட்டெரி ஊழியர்களுக்குமான ஓய்வூதியமும் வழங்கும் பலுவையையும் அரசு ஏற்க வேண்டிய நிலை ஏற்படும். பங்களிப்புடன் கூடிய ஓய்வூதிய திட்டத்தால் அரசுக்கு லாபம் உண்டாகும் என்ற போலியான வாதமும் இந்த புள்ளி விவரங்களால் நிராகரிக்கப்படுகிறது.

16. 2004-05 ஆம் ஆண்டில் ஒட்டு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 0.51% ஆக உள்ள அரசின் ஓய்வூதிய செலவுகளில், பாதுகாப்பு ஊழியர்களுக்கான செலவு 0.26%(இது ஒட்டு மொத்த ஓய்வூதிய செலவில் 50%). தற்போதுள்ள ஒட்டு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 0.5%சதவிகிதமாக மட்டும் உள்ள ஓய்வூதிய செலவு என்பது இந்திய பொருளாதார வளர்ச்சி விகிதத்தின் காரணமாக குறையும் என்று பொருளாதார ஆய்வு மையத்தின் அறிக்கை முடிவுக்கு வந்துள்ளது.

17. பெரும்பாலான மாநில அரசாங்கங்கள் பங்களிப்புடன் கூடிய ஓய்வூதிய திட்டத்திற்கு மாற முடிவு செய்துவிட்டதால் (பொருளாதார ஆய்வு மற்றும் கொள்கைக்கான மையம் மெற்கொண்ட ஆய்வின் படி) அனைத்து மாநில அரசாங்கங்களின் ஓய்வூதிய் செலவு என்பது 2038 ஆம் ஆண்டில் மூன்று மடங்கு உயரும் என நியாயமாக நாம் முடிவிற்கு வர முடியும்.

18. ஓய்வூதிய நிதி ஒழுங்கு முறை மற்றும் மேம்பாட்டு ஆணைய மசோதா முதல் முறையாக 2003ஆம் ஆண்டு தேசிய ஜனநாயக கூட்டணி அரசாங்கத்தால் பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. 2006ஆம் ஆண்டு ஓய்வூதியதாரர்களின் எண்ணிக்கை கூடுவதால் ஏற்படும் நிதியாதார தாக்கத்தை பரிசீலிக்கவும், நிதி திரட்டும் முறைக்கான மாற்று ஆலோசனைகளை பரிந்துரைக்கவும் ஒரு குழுவை 6ஆவது ஊதியக் குழு நியமித்தது. அந்த குழு 2007ல் வழங்கிய அதன் அறிக்கையில் 'தற்போதுள்ள ஓய்வூதிய முறைகள் என்பது புதிய ஓய்வூதிய திட்டம் அறிமுகப் படுத்தப்பட்டதால் சிக்கல்களை அதிகப்படுத்தியுள்ளது' எனவும் 'மேலும் மாற்றங்களை கொண்டு வர துவங்கும் போது எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டும்' எனவும் தப்பிக்க முடியாத முடிவுக்கு

வந்தது. ஓய்வூதிய செலவு அதிகரிக்கும் என இந்த அறிக்கை தந்துள்ள வெளிச்சத்தில், 2011ல் மீண்டும் அறிமுகப்படுத்தப் பட்டுள்ள இந்த ஓய்வூதிய நிதி ஒழுங்கு முறை மற்றும் மேம்பாட்டு ஆணைய திருத்த மசோதாவிற்காக சொல்லப்பட்ட காரணங்கள் முழுமையானது அல்ல. இந்த மசோதா சட்டமாக்கப்பட்டது என்றால் தற்போது ஓய்வூதியம் பெறுபவர்கள் பொருளாதார பாதுகாப்பற்ற எதிர்காலத்திற்கு தள்ளப்படுவார்கள்; தற்போது உள்ள ஊழியர்கள் பங்கு சந்தையின் நிலையற்ற தன்மையின் பின் தள்ளப்படுவார்கள். எனவே பணிக்கு சேர்ந்த தேதி எதுவாக இருந்தாலும் ஆசிரியர்கள் உள்ளிட்ட அனைத்து அரசு ஊழியர்களையும், முறையற்று நியமிக்கப்பட்டவர்களையும் தற்போது உள்ள சட்டபூர்வ, வரையறுக்கப்பட்ட ஓய்வூதிய பயன் திட்டத்தின் கீழ் திரும்ப கொண்டு வர வேண்டும் என உங்களை கேட்டுக் கொள்கிறோம்.

இறுதியாக **"எதிர்கால செலவு என்பது அளவில் அதிகமாக இருந்தாலும், பெரிய அளவு என்பது அதிக காலம் நீடிக்க போவதில்லை, மொத்த உள் நாட்டு உற்பத்தியில் பயப்படக் கூடிய அளவில் அதிக இடத்தை பிடிக்காது, அது வீழ்ச்சி அடையும் என்ற விவரங்கள் முக்கியமாக தரப்பட்டுள்ளது. செலவுகளை செய்ய தற்போதுள்ள 'நீங்கள் போகும்போது ஊதியம்(PAY AS YOU GO)' என்ற நடைமுறையை தொடர்ந்து கடைபிடிப்பது தான் பொருத்தமான தீர்வாக இருக்க முடியும்"** என்ற 6ஆவது ஊதியக் குழு நியமித்த கமிட்டியின் இறுதி பாராவை தங்களுக்கு சுட்டிக்காட்டி, மேலே உள்ள பாராக்களில் சொல்லப்பட்ட காரணங்களால், ஓய்வூதிய நிதி ஒழுங்கு முறை மற்றும் மேம்பாட்டு ஆணைய திருத்த மசோதாவால் வகுக்கப்பட்ட புதிய ஓய்வூதிய திட்டத்தை, அரசு ஊழியர்கள் மற்றும் அரசாங்கத்தின் நலன் கருதி பாராளுமன்றத்திலிருந்து திரும்ப பெற வேண்டும் என உங்களை கேட்டுக் கொள்கிறோம்.

(1)

(2)

(3)

(4)

(5)

(6)

(7)

(8)

(9)

(10)